# 7.3 திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

## குறுவினா

1. மூவேந்தர் யாவர்?

Answer:

சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் மூவேந்தர் என்று அழைக்கப்பட்டனர்.

2. திருநெல்வேலி என்னும் பெயர் பெற்ற தன் காரணம் யாது?

Answer:

நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி – எனப்பெயர் பெற்றது.

3. திருநெல்வேலியில் சிறப்புமிக்க பழமையான மலைகள் யாவை?

Answer:

1. பொதிகை மலை
2. குற்றால மலை

4. இரட்டை நகரங்கள் யாவை?

Answer:

திருநெல்வேலியும், பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள் என அழைக்கப் படுகின்றன.

5. பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுவதன் காரணம் யாது?

Answer:
பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால், பாளையங்கோட்டை தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என்று அழைக்கப்படுகின்றது.

6. பண்டைய வரலாற்றை நினைவூட்டும் திருநெல்வேலி ஊர்கள் யாவை?
Answer:

- சேரன்மாதேவி
- கங்கைகொண்டான்
- திருமலையப்பபுரம்
- வீரபாண்டியப்பட்டினம்
- குலசேகரன் பட்டனம்

7. திருநெல்வேலி ஈர்த்த அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் யாவர்?
Answer:

- ஜி.யு. போப்
- கால்டுவெல்
- வீரமாமுனிவர்

8. திருநெல்வேலியில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் யாவர்?
Answer:
மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர்.

## சிறுவினா

1. திருநெல்வேலி – பெயர்க்காரணம் யாது?

Answer:

1. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு மூங்கில் காடு என்னும் பொருள் கொண்ட ‘வேணுவனம்’ என்னும் பெயர் இருந்தது.
2. மூங்கில் நெல் மிகுதியாக விளைந்ததால் அப்பகுதிக்கு ‘நெல்வேலி’ என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.
3. நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப்பெயர் பெற்றது.